ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி அ. பிரமோதூத வரு பங்குனி மீ பகுதி ௩.
Vol 8. March & April 1931. No. 3.

கம்பர் கடவுள் வாழ்த்து.

(ஏழாந்தொகுதியின் 261-ம் பக்கத்தொடர்ச்சி.)

கிஷ்கிந்தாகாண்டம்.

மூன்றுருவெனக்குணமும்மையாமுதல்
தோன்றுருவவையுமம்முதலைச்சொல்லுதற்கு
என்றுருவமைந்தவிடையினின்றவுஞ் ௧
* சான்றுருவுணர்விலுக்குவந்ததாயினன்.

முன் வாழ்த்துக்களால் ஸர்வேச்வரன் சேதநாசேதநங்களில் அந்தராத்மாவாயிருப்பவனென்றும், இங்ஙனம் அந்தராத்மாவாயிருக்குமிருப்பு, ஸ்ருஷ்டிகாலம் லயகாலமென்ற எல்லாக்காலங்களிலும் அவனுக்குண்டென்றும் சொல்லப்பட்டன. இவ்வாழ்த்தினால் முன்னுரைக்கப்பட்ட அசேதனத்தினியல்புகளை விரித்துரைத்ததோடு, அந்த மூலப்ராக்ருதியையும் ஆத்மாக்களையும் தனக்குச் சரீரமாகக்கொண்டுள்ள ஸர்வேச்வரனே ஸ்ரீராமபிரானென்றுஞ் சொல்லப்படுகின்றன. ஆக, இவ்வாழ்த்து முன்வாழ்த்துக்களின் விரியாக அமைந்துள்ளதென்பது பெறப்படும்.

* சான்றுருவுணர்விலுக்குணர்வதாயினன் என்றும். சான்றவருணர்விலுக்கு என்றும் ஊன்றுருவுணர்விலுக்கு என்றும். சான்றுருவுலகினுக்குலகத்தாயினன் என்றும், உணர்விலுக்குணர்வதாயினர் என்றும் பாடபேதங்களுண்டு.

(இதன் பொருள்) அன்பருணர்வினுக்குக் களிபபைத்தரும் பொருளாகிய ஸ்ரீராமபிரான், மூன்றுநிறங்களென்று சொல்லும்படி மூன்று குணங்களையுமுடைய மூலப்ரக்ருதியும், அந்த மூலப்ரக்ருதியினின்றுமுண்டாகிய எல்லாத் தத்வங்களும், மூலப்ரக்ருதியைச் சொல்லும்படி பொருந்தி வடிவமைந்த உலகங்களும், இப்பிரக்ருதியாகிய விடத்தைப்பற்றியிருக்கின்ற ஜீவர்களும் என்ற இவைகளையெல்லாம் தனக்குச் சிறந்த சரீரமாகக்கொண்ட பரப்ரஹ்மமாம்; எ-று.

இனி, இதற்கு விரிவுரை வருமாறு.—

முன்னர் மூலப்ரக்ருதியினியல்புரைக்கத் தொடங்கி, அதனுடைய நிரூபக தர்மதனைத் தெரிவிக்கிறார்.—மூன்றுருவெனக் குணமும்மையாமென்று. இந்த மூன்றுருவெனக் குணமும்மையாம் என்ற சொற்கள் முதல் என்பதற்கு அடைமொழியாய் நின்றன. முதல்-மூலப்ராக்ருதி. இது, உலகிற்குக் காரணமாயிருத்தலால் இதற்கு முதலென்று பெயர் வழங்கலாயிற்று. * "த்ரிகுணம் தஜ்ஜகத்யோநி: அநாதி ப்ரபவாவ்யயம்" "த்ரிகுணம் தஜ்ஜகத்யோநி: அநாதி ப்ரபவாவ்யயம்" என்ற ப்ரமாணத்தாலும் மூலப்ராக்ருதி முக்குணமுடையதெனபதும், ஜகததிற்குக் காரணமென்பதும் பெறப்பட்டன. இங்கு மூலப்ரக்ருதி ஸர்வேச்வரனுடைய லீலைக்கு ப்ரதானோபகரணமாயிருக்கிறமுறைபற்றி ஜகத்காரணமென்று உபசாரத்தால் சொல்லப்பட்டதேயன்றி வேறில்லை. அக்கினிக்குச் சூடுபோலவும், நீருக்குத்தண்மைபோலவும் ப்ரக்ருதிக்கு முக்குணங்கள் இயற்கையாம். இதனை, ‡ "ஸத்த்வரஜஸ்தமாம்ஸீதி த்ரயோ குணா: ப்ரக்ருதே: ஸ்வரூபாநுபந்திந: ஸ்வாபாவவிசேஷா:" "ஸத்வ ரஜஸ்தமாம்ஸி த்ரயோகுணா:, ப்ரக்ருதே: ஸ்வரூபாநுபந்திந, ஸ்வா

* இதன்பொருளாவது — அநாதியாயும் உற்பத்திநாசமில்லாததாயும் ஸத்வரஜஸ்தமஸ்ஸென்கிற மூன்று குணங்களுடன் கூடினதாயுமிருக்கிற ப்ரக்ருதியானது ஜகததிற்குக்காரணமாயிருக்கிறது; என்பதாம்.

‡ இதன்பொருளாவது.— ஸத்வம்ரஜஸ்தமஸ்ஸென்கிற மூன்றுகுணங்கள், ப்ரக்ருதியினுடைய ஸ்வரூபத்தைப்பற்றியிருக்கிற ஸ்வபாவ விசேஷங்களாம்; எ-று.

பாவவிசேஷா:" என்றதனாலுமறியலாம். "இவை ப்ராக்ருதிக்கு ஸ்வரூபாநுபந்திகளான ஸ்வபாவங்களாய்" என்று லோகதேசிகன் அருளியதுங்காண்க. மூன்றுரு என்பதிலுள்ள உரு என்ற சொல் ஈண்டு நிறத்தைக்குறித்து நின்றது. ஸத்வகுணத்திற்கு வெண்ணிறமும், ரஜோகுணத்திற்குச் செந்நிறமும், தமோகுணத்திற்குக் கருப்பு நிறமும் சாஸ்திரத்திற் சொல்லப்பட்டுள்ளன. "மும்மைத்தென்னந் தமிழ்" என்பதில் மும்மை யென்பது மூன்றெனுந்துணையாய் நின்றதுபோல ஈண்டும் மும்மை என்பது மூன்றெனுந்துணையாய் நின்றது. இந்த மூன்று குணங்களும் § ப்ரக்ருத்யவஸ்தையில் வெளிப்படையாகத்தோற்றாது, * விகாராவஸ்தையில் வெளிப்படையாகத் தோன்றும். இதனைப் பாஷ்யகாரரும், ‡ [illegible] "ப்ரக்ருத்யவஸ்தாயாம் அநுத்பூதா: தத்விகாரேஷு மஹதாதிஷூத்பூதா:" என்று அருளிச்செய்தார். குணந்தோன்றாதிருக்கும் நிலைமையை ஸத்ருசவிகாரமென்பார்கள். ஸத்ருசவிகாரமாவது.—குணங்கள் ஒன்றிற்கொன்று ஏற்றிழிவில்லாது ஸமமாயிருக்கும் விகாரமாம். இதனைப் பெயர் உருவங்களைப் பிரித்தறிதற்கரிதாயிருக்கும ஸூக்ஷ்மவிகார மென்பர்கள். குணந்தோற்றுகின்ற நிலைமை விஸத்ருசவிகாரமெனப்படும். விஸத்ருசவிகாரமாவது.— குணங்கள் ஒன்றிற்கொன்று ஏற்றிழிவாயிருக்கும் விகாரமாம். இதனை, பெயர் உருவங்களைப் பிரித்தறிதற்கு யோக்யமாயிருக்கும் ஸ்தூலவிகார மென்பர்கள்.

இங்கு "குணமும்மையாமுதல்" என்றதனன் "ஸத்வரஜஸ்தமாம்ஸி த்ரவ்யாணி" என்று சாங்க்யர்கள் இக்குணங்களைத் திரவியம் என்று சொல்லுகிறபக்ஷத்தை மறுத்தாரென்பது புலனாகிறது.

---

§ ப்ரக்ருத்யவஸ்தை—முக்குணங்களும் ஸமமாகவிருக்கின்ற நிலைமை.

* விகாராவஸ்தையாவது—மஹதாத் முதலிய தத்வங்கள் தோன்றும் ஸ்தூலாவஸ்தையாம்.

‡ (இதன்பொருள்) (முக்குணங்கள்) ப்ரக்ருதியென்னும் நிலைமையில் பிரகாசிக்காமலும், அந்த ப்ரக்ருதியினுடைய விகாரமான மஹதாதிகளிலே பிரகாசிக்கின்றன; எ-று.

முதல் தோன்றுரு எவையும்--மூலப்ராக்ருதியினின்றும் தோன்றிய தத்வங்களனைத்தும். அவையாவன.—§ அவிபக்ததமஸ், விபக்ததமஸ், அக்ஷரம் என்ற ஸூக்ஷ்ம தத்வங்களும், ‡ மஹாந் முதலிய ஸ்தூலதத்வங்களுமாம். அ முதலைச்சொலலுதற்கு ஏன்றுரு அமைந்தவும்-அந்த மூலப்ராக்ருதியே தனக்கு (ஜகத்திற்கு)க்காரணமென்று சொல்லுதற்குப்பொருந்தி வடிவமைந்த பிரபஞ்சமும், உலகு ப்ரக்ருதியின் மயமான்றிப் பிறிதில்லையாதலால 'அம்முதலைச் சொல்லுதற்கு என்றுரு அமைந்தவும்' என்றார். இதுபற்றியே திருவள்ளு

---

§ அவிபக்ததமஸாவது-பிறர்களாலறிதற்கரிதாய் ஈசுவரனாலறியத்தக்கதாயிருப்பதாம். விபக்ததமஸாவது-ஸர்வேசுவரனால வைப்பட்டதாய், பெயர் வேற்றுமையடைதற்குரிய நிலைமையெய்திக் காரியப்படுஞ்செவ்வியினையுடையதாயிருப்பதாம். அக்ஷரமாவது-ஆத்மாக்களின் கூட்டங்களைத் தன்னிடங் கொண்டுள்ள சடப்பொருளென அறிதற்குரியதாயிருப்பதாம் பூமியிற்பதிந்த விதைபோன்றது அவிபக்ததமஸென்றும் மண்ணினின்றும் மிகச் சிறிது வெளித்தோன்றும் விதைபோன்றது விபக்ததமமென்றும். நீர்கலந்து நன்றாய் நனைந்து உறுப்புசிதைவினையுடைய விதைபோன்றது அக்ஷரமென்றும் இவற்றின் வேறுபாட்டை இவ்வுதாரணங்களா லறியலாம் இந்த மூன்றும் ப்ரகருதியின் ஸூக்ஷ்மாவஸ்தைகளாதலால் இவை தத்வ வகையிற் சேர்த்தெண்ணப்படமாட்டா

‡ மூலப்ரகருதியினின்றும் மஹான் என்ற தத்வம் பிறக்கும். இதினின்றும் வைகாரிகம், தைஜஸம் பூதாதி என்ற மூன்று அஹங்காரம் உண்டாகும். இவற்றுள் வைகாரிகத்தினின்றும், செவி தோல் கண் நா மூக்கு என்னு ஞானேந்திரியம் ஐந்தும். வாக்கு கால் கை பாயு உபஸ்தம் என்ற கர்மேந்திரியம் ஐந்தும், மனமும் என்ற பதினொரிந்திரியங்கள் தோன்றும்.

பூதாதியினின்றும் சப்ததன்மாத்திரை பிறக்கும். இதினின்றும் ஆகாசமும் ஸ்பரிசதன்மாத்திரையும் பிறக்கும். இதினின்றும் தேஜஸும் ரஸதன்மாத்திரையுமுண்டாகும். இதினின்றும் அப்பும் கந்ததன்மாத்திரையுந் தோன்றும். இதினின்றும் ப்ருதிவீ பிறக்கும். (தன் மாத்திரைகளாவன-பூதங்களின் ஸூக்ஷ்மாவஸ்தைகள்)

தைஜஸமென்னும் ராஜஸாஹங்காரமானது, வைகாரிகமென்னும் ஸாத்விகாஹங்காரமும், பூதாதி என்னும் தாமஸாஹங்காரமும் தத்தம காரியத்தையுண்டாக்குமிடத்து விதை முளைப்பதற்கு நீர் துணையாகவிருப்பதுபோல அவற்றுக்குத் துணையாயிருக்கும்.

வரும், "சுவையொளியூறோசை நாற்றமென்றைந்தின், வகைதெரிவான்கட்டேயுலகு" என்றுரைத்ததுங் காண்க. இங்கு, "சுவையொளியூறோசை நாற்றமென்றைந்தின் வகையாகிய ப்ரக்ருதி தத்வம் இருபத்துநான்கையு மறிபவனது அறிவுக்கு உலகுவிஷயமாமென்றதனான் இந்த இருபத்துநான்கு தத்வங்களைக்காட்டிலும் உலகு வேறில்லையென்பது பெறப்படும். உலகெல்லாம் ப்ரக்ருதியின் மயமென்பதை ஆழ்வாரும் "சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த முடிவில் பெரும்பாழ்" என்றருளிச்செய்தார்.

இடையில் நின்றவும்-இப்பிரக்ருதியாகிய விடத்தைத் தனக்கு அவலம்பனமாகக்கொண்டுநின்ற ஜீவர்களும். ஆத்மா ப்ரக்ருதியாகிய பற்றுக்கோடின்றித் தனித்துநிற்பதோர் நிலையில்லையாதலால் இடையினின்றவும் என்றார். ஈண்டு இடையென்பதற்கு நடுவென்று பொருள்கொள்ளாது இடம் என்று கொள்க. இடை ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உருபு. அவாய்நிலையால் இடை என்பதற்கு ப்ரக்ருதியாகிய இடம் என்று பொருள் கொள்ளப்பட்டது. சான்றாரு-சிறந்த சரீரமாகக்கொண்டுள்ள பரப்ரஹ்மம். "ஆத்மாக்களையும் ப்ருதிவீயாதிபூதங்களையும் சரீரமாகக்கொண்டுள்ளான்" என்ற மறைப்பொருளோடொத்திருப்பது நோக்கத்தக்கது. உணர்வினுக்குவந்ததாயினானென்பது ராமனென்னும் பெயர்ப்பொருளையுணர்த்திநின்றது. ராமன்-தன்பக்கல் யாவரும் மகிழ்ச்சியுறப் பெற்றவன். இஃதன்றி, ஸர்வேசுவரன் ஸர்வரஸமுடைய வஸ்துவாதலால் உணர்வினுக்குவந்ததாயினான் என்றார் என்று பொருள் கொள்ளினும் பொருந்தும். "தேனும்பாலுங்கன்னலு மமுதுமாகித் தித்தித்து என்னூனிலுயிரில் உணர்வினின்ற வொன்றையுணர்ந்தேனே" என்றும், "ஆராவமுதே" என்றும் அருளியதும் இங்கறியத்தக்கன.

தொடரும்.

——

ப. அ.

ஸ்ரீ:

ஸ்ரீ வைஷ்ணவ மகாநாடு.

(பண்ணுருட்டியில் நடந்த விவரம்.)

இம்மகாநாடு, திருமகிழ்மாறன் செய்திய அருளால் நிகழும் பிரமோதூத ஆண்டு பங்குனித்திங்கள் 25-ம் நாள் (7—4—31) பண்ணுருட்டி ஸ்ரீமத்யதி இராமாநுஜநாவலர் ஸ்வாமிகள் சபை 6-ம் வருட விழாவில் நடைபெற்றது :—

காலை 5 மணிமுதல் 10 மணிவரையில் ஸ்ரீமத் நாவலர்பிரானுடைய திருநக்ஷத்திர பரிபாலனம் செவ்வனே நடைபெற்றது. பின்னர் 10-30 மணிக்கு திருக்குடந்தை ஸ்ரீமான் T. D. இராமஸ்வாமி நாயுடுகாரு (பிரபந்தவித்வான்) தலைவர் அவர்களை மாலை மரியாதை வணக்கத்துடன் சபைக்கு அழைத்துவந்ததன்பின்னர் சென்னை யூனிவர்சிடி லெக்சரார் ஸ்ரீமான் வித்வான் V. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள் தலைவரவர்களின் பெருந்தன்மையையும் வைணவவுலகத்துக்கு அவர்கள் "பிரமாணத்திரட்டுகள்" "ஸ்ரீபாஷ்ய தமிழ்மொழிபெயர்ப்பு" இவைகளின்மூலமாய்ச் செய்துள்ள பேருபகாரங்களை விளக்கித் தலைவராக அவர்கள் அமருமாறு விண்ணப்பித்துக்கொண்டார்கள். பின் அவர்கள் தலைமை வகித்து முன்னுரையாக நம் வைணவத்தின் தொன்மையையும், அதுவரும் பாரம்பரியத்தையும், அவ்வகையிலீடுபட்ட ஸ்ரீமத் இராமாநுஜநாவலர் ஸ்வாமிகளின் அரிய பெரிய தொண்டையும், வைணவத்தின் ஏற்றத்தையும் சுருதிகளிலிருந்து மிக நன்றாக உதகரித்துக்காட்டிச் செவ்வனே 'கரபத்திரத்தினால் படித்துக்காட்டினார்கள்.

பின் புலியூர் உபாத்யாயர் ஸ்ரீமான் V. K. சக்கரபாணி ராஜு அவர்கள் "சொல்லின் செல்வன்" என்பது பொருளாக ஸ்ரீ அநுமானின் சொற்சதுரப்பாட்டை அழகாகவும் இன்னிசையுடனும் சொல்லி முடித்தார்கள்.

பின் ததியாராதனம் நடைபெற்று முடிந்தவுடன், மாலை 3-30 மணிக்கு சபை ஆரம்பமாயிற்று. கள்ளக்குறிச்சி, அன்புநிலைக்கழக ஆசிரியர். ஸ்ரீமான் இராமகிருஷ்ண சடகோபதாஸரவர்கள், "இறை

வனது அறிதுயிலின் உண்மையும், பக்தியோகமும்'' என்பது பொருளாக மேனாட்டாரின ஆராய்ச்சியைப் பெரிதும் தழுவி, ஹிருதயஸ்தானத்திலே இறைவன் செய்யும் அறிதுயிலின் தத்வத்தை, புதுமுறையில் நன்கு வெளியிட்டதைப் அழகாகவிளக்கி பக்தியின் ஆவசியகதையைக் குறிப்பிட்டார்கள்.

பின்னர் பண்ணுருட்டி ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியர் ஸ்ரீமான் கோ. சுந்தரராமாநுஜலுநாயுடு அவர்கள் "பெரியாழ்வார்" என்றெடுத்துக்கொண்டு, ஆழ்வார் பேதமற எல்லாரையும் பல்லாண்டுக்கழைக்கின்றாரென்றும், பிள்ளைத்தமிழிலே தொன்மையுடையது பெரியாழ்வாருடையதென்றும், இலக்கணத்திற்குஆதியிலக்கியமாயிதுவே என்றும், ஒவ்வொரு பதிகத்திலே ஒவ்வொரு அரியவிஷயங்கள் சொல்லினவற்றில் முக்கியமானவைகள் சில எடுத்துக்கொண்டு தக்கமுறையில பண்டிதபாமராஞ்சனமாக விளக்கினார்கள்.

அதன்பின்னர் மதுரை, "ஹரிஸமய திவாகரம்" பத்திராசியர் ஸ்ரீமான் பண்டித. ஆ. அரங்கராமாநுஜதாஸரவர்கள் "கம்பர் கவித்வம்" என்ற பொருள்பற்றி முன்னர், கம்பர் பூர்வாசார்யர்கள் போன்ற விருத்தகேள்விபாதலால் அவர் ஆப்ததமரென்று நிரூபித்தனர். "மூவர்தம்மிலும் முந்திய நாவினார்" என்பது சம்பிரதாயவிற்பன்னரைக் குறிப்பிடுகின்றதென்றும், "இருந்தகுலக்குமரர் தமை" என்ற பாவால ஸ்ரீராமலக்ஷ்மணர்களிடம் பரத்துவசின்னங்கண்டு ஜனகன் அடையுமுறை மறைப்பொருளோடொத்திருக்கிறதென்று மெடுத்துக்காட்டி, "சிவனோ அல்லன, நான்முகனல்லன்" என்ற பாவாலும் ஏனையவைகளாலும், பரத்வம் நிர்ணயித்துக்காட்டி, உபமான உபமேய சதுரப்பாட்டால் கம்பரின் ஒத்தார் எவருமிலர் எனபதற்கு "ஆலமர்வித்தின்" என்பதனால தெரிவித்து, சமயவிஷயத்தில கம்பருக்கிருக்கும் ஆழ்ந்த ஆராய்ச்சியைப் பலபடியாலும விளககினர். மேலும, "பேதியாதுநிமிர்பேதவுருவம்"எனபதாலும "உன்குலம்உன்னதாக்கி" என்பதாலும, வேறு பல அரிய விஷயங்களைக் காம்பீர்யத்தோற்றத்தோடு சொலவன்மைதோன்ற சபை வெகு நன்றாக ஆனந்திக்குமாறு பேசிமுடித்தார்கள்.

அதன்பின்னர் சென்னை யூனிவர்சிடி லெக்சரர் ஸ்ரீமான் வித்வான் V. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள் "சிறியதிருவடி" என்ற பொருட்கொண்டு, சிறியதிருவடி என்ற பெயர்விளக்கத்தை

யும், சம்பிரதாயக்கருத்துத்தோன்ற விளக்கி, கம்பர் வேடிக்கையாக இக்கருத்துப்பட "திருவடியென்னும் பெருமை யாவர்க்கும் தெரிய நின்றான்" என்பதால் தெரிவித்து, சுக்ரீவனை இராமனிடத்தில் நட்பு படுத்தி வைக்கும் கட்டத்தில சிறியதிருவடியின் சதுரப்பாட்டைப் பலபாக்களால் நன்கு விளக்கினதோடு விரோதியும் ஈடுபடுவான் இச்சதுரப்பாட்டுக்கென்று அசோகவனத்திலுள்ள சீதையின் துயரத்தை நீக்குவான்வேண்டி, முயன்று முடிவுகட்டி நடத்திய அவன்றன் மதிநுட்பத்தை "வால்மீகராமாயணத்தால்" மிகத் தெளிவுபெறச் செய்தார். தவிர அனுமான் தற்புகழ்ச்சியின்மை விளக்குமுறையால், கம்பர் காவியத்தைப் பலபாக்களால் விளக்கி "உன்பெருந்தேவிக்கும்" என்ற பாட்டில் சொற்கள் அமைக்கப பட்டிருக்கும் திறமையைத்தக்கபடி பண்டிதர்களும் வியக்கும்படி யாய்ப் பொருட்செறிவுகளை நன்கு விளக்கி அருளினார்கள். பின் கம்பநாட்டடிகள் நாவிலேயே மற்றொருவர் வாக்கில் வைத்துச்செய் கின்ற துதிப்பாக்களைப்பாடி இனிதே முடித்துக்கொண்டார்கள்.

அதன்பின் பண்ணுருட்டி ஸ்ரீமான தேவநாயகஅய்யா அவர்கள் பொதுவாகப்பேசவந்து "கதரின்" இன்றியமையாமையைப்பற்றிப் பண்டிதரும் பாமரரும் போற்றத்தக்கமுறையில் வேண்டுகோள் குறிப்பால் தீரமாக எல்லார் உள்ளததிலும் உறையும்படி, சொன் னார்கள். அதைச்சார்ந்து கள்ளக்குறிச்சி ஸ்ரீமான் இராமகிருஷ்ண சடகோபதாஸர் அவர்கள் மேல்நாட்டு அறிவியலநூல்களை ஒட்டி யும் தறகாலமுறைக்கேற்ப எச்சமையத்தோறும் சிறப்பாக வைஷ் ணவரும் "மகாத்மாகாந்தி"யடிகளின் கொள்கைக்கும் செய்கைக் கும் ஈடுபடுதல் அவசியமென்றும் அதுவே "வைஷ்ணவம்"என்றும் கூறிமுடித்தார்கள்.

பின்னர் தலைவர் அவர்களால் முடிவுரை சுருங்கியகாலததில் நன்றாகச் சொல்லப்பட்டது. பின் சபையாரால் அனைவருக்கும் வந்தனோபசாரம் முதலானவை வழஙகப்பெற்று, சந்தனம் புஷ்பம் தாம்பூலம் விநியோகிக்கச் சபையின் ஆறாம ஆண்டு நிறைவுவிழா மஙகளகரமாக நிறைவேறியது.

வெ. கிருஷ்ணராமாநுஜதாஸர்,
காரியதரிசி,
ஸ்ரீ. ரா. நா. ஸபை, பண்ணுருட்டி.